சுருக்கம்

குடிநீர் வழங்கல் – கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் ஒன்றியம் – கோசூர் மற்றும் 5 ஊராட்சிகளைச் சார்ந்த 72 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் – நிர்வாக ஒப்புதல் வழங்கப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ.3) துறை

**அரசாணை (நிலை) எண் 76**

நாள் 21.05.2009

**படிக்கப்பட்டது:**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்களின் கடித எண் கோ.72 குடியிருப்புகள்/கிரா.புரம்./ உபொ.8 /திமேபி /2008, நாள் 20.01.2009.

---

**ஆணை :**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், கோசூர் மற்றும் 5 ஊராட்சிகளைச் சார்ந்த 72 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தை நிறைவேற்ற நிர்வாக ஒப்புதல் கோரும் செயற்குறிப்பு ஒன்றை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அரசுக்கு அனுப்பியுள்ளார்.

2. மேற்படி 72 குடியிருப்புகளில், 2001–ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கட் தொகை 29915 ஆகும் என்றும், 2010 ஆம் ஆண்டு இத்திட்டப் பகுதியில் மக்கட் தொகை 31496 எனவும், 2025 ஆம் ஆண்டு இடைக்காலத்தில் 34648 எனவும் 2040 ஆம் ஆண்டு உச்சகட்ட காலத்தில் 37795 எனவும் கணக்கிடப்பட்டுள்ளது. நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு தற்போதுள்ள நீர் ஆதாரங்களில் கிடைக்கக்கூடிய 10 லிட்டர் அளவினை கணக்கில் கொண்டு மீதம் 30 லிட்டர் குடிநீர் மற்றும் 10 சதவீத குழாய்வழி நீர் இழப்பினையும் சேர்த்து இடைக்காலத்தில் (2025) நாளொன்றுக்கு 1.18 மில்லியன் லிட்டர் மற்றும் உச்சகட்ட காலத்தில் (2040) 1.32 மில்லியன் லிட்டர் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் திட்டம் வடிவமைக்கப் பட்டுள்ளதாகவும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அரசுக்கு தெரிவித்துள்ளார்.

3. மேலும் இக்கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கான அமைப்பு செலவு ரூ.668.00 இலட்சம் என்றும் ஆண்டு பராமரிப்புச் செலவு ரூ.18.60 இலட்சம் என்றும், குறிப்பிட்டுள்ளதோடு தனி நபர் திட்டச் செலவு ரூ.2121/– ஆகின்றது என்றும் 1000 லிட்டர் குடிநீர் செலவு ரூ.20.16 என்றும் கணக்கிடப்பட்டு, இத்திட்டத்தினை குறைந்தபட்ச தேவை திட்டத்தின்கீழ் 100 விழுக்காடு அரசு மான்யத்துடன் செயல்படுத்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அரசின் நிர்வாக ஒப்புதலை கோரியுள்ளார்.

4. 12.01.2009 அன்று நடைபெற்ற வாரிய இயக்குநர்கள் குழு கூட்டத்தில் வாரியத் தீர்மான எண் 2.9-ல் இக்கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு அரசின் நிர்வாக ஒப்புதல் பெற பரிந்துரை செய்துள்ளது. இதன் அடிப்படையில் இத்திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அரசுக்கு செயற்குறிப்பினை அனுப்பியுள்ளார்.

5. மேற்கண்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் செயற்குறிப்பினை ஏற்று கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், கோ[illegible]ர் மற்றும் 5 ஊராட்சிகளைச் சார்ந்த 72 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தை நிறைவேற்ற ரூ.668.00 இலட்சம் அமைப்புச் செலவு என்றும், ரூ.13.60 இலட்சம் ஆண்டு பராமரிப்புச் செலவு என்றும், தனி நபர் திட்டச் செலவு ரூ.2121/- என்றும், 1000 லிட்டருக்கான குடிநீர் செலவு ரூ.20.16 என்றும் கணக்கிடப்பட்டு இந்த கூட்டுக் குடிநீர் திட்டத்தினை குறைந்தபட்ச தேவை திட்டத்தின்கீழ் 100 விழுக்காடு அரசு மானியத்துடன் செயல்படுத்த நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்.
சென்னை – 600 005.
ஊரக வளர்ச்சி இயக்குநர், சென்னை – 600 015.
அரசு செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை,
சென்னை – 600 009.
மாவட்ட ஆட்சியர், கரூர் மாவட்டம், கரூர்.
சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் (ஊரக வளர்ச்சி இயக்குநர் மூலமாக).
மாநில கணக்காயர், சென்னை – 600 018.
நகல்
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் முதுநிலை
நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலரின் தனிச் செயலர்,
சென்னை – 600 009.
பொது (நூலகம்) துறை, சென்னை – 600 009.
நிதி (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்) துறை, சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு2/ குவ2/குவ.3/குவ4/வ.செ.)
துறை, சென்னை – 600 009.
இகோ / உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

2/4/09
பிரிவு அலுவலர்.